ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1891/9 - 2014 දෙසැම්බර් මස 02 වැනි අඟහරුවාදා - 2014.12.02

*1891/9 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78* (ix)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

137ஆம் பிரிவின் கீழான விதிகள்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 70 ஆ என்னும் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட அதிகாரியாகவுள்ளவரான உயர்கல்வி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ மற்றும் 70ஈ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் சட்டத்தின் 137 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.

செயலாளர்,<br>
உயர் கல்வி அமைச்சு,<br>
குறித்துரைக்கப்பட்ட அதிகாரி.

கொழும்பு,<br>
2014, திசெம்பர் 02.

**விதிகள்**

2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆந் திகதிய 1824/21 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, குறித்துரைக்கப்பட்ட அதிகாரி (நிறுவகங்களை பட்டம் வழங்கும் நிறுவகங்களாக ஏற்று அங்கீகரிப்பது தொடர்பான தத்துவங்கள்) விதிகள், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-

(1) அதன் 31 ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"31. பட்டமளிக்கும் நிறுவகங்களாக அங்கீகரிக்கப்பட்டவையும், மருத்துவம், பொறியியல், கட்டிடக்கலைப் பட்டங்களுக்கும் மற்றும் வேறு ஒத்த உயர்தொழில்சார் பட்டங்களுக்கும் இட்டுச் செல்கின்ற கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை அளிக்கின்றவையுமான அரச சார்பற்ற எல்லா நிறுவகங்களும் குறித்துரைக்கப்பட்ட உயர்தொழில்சார் குழுக்களிடமிருந்து இணங்கியொழுகுகைச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அத்தகைய சான்றுபடுத்துகையைச் சமர்ப்பித்தலும் வேண்டும்."

12- 560



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.